செய்தி வெளியீடு எண்.851 நாள். 13.10.2008

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை இன்று (13.10.2008) தலைமைச் செயலகத்தில் கிறித்துவ சமுதாயத்தின் பிரதிநிதிகளான சென்னை, மயிலைப் பேராயர் சின்னப்பா, நாகர்கோயில் பேராயர் பீட்டர் ரெமிஜியஸ், சென்னை சி.எஸ்.ஐ. பேராயர் தேவசகாயம், நெல்லை சி.எஸ்.ஐ. பேராயர் ஜெயபால் டேவிட், நாகர்கோயில் சி.எஸ்.ஐ. பேராயர் தேவகடாட்சம், அருட்திரு ஸ்தனிஸ்லாஸ், சி.எஸ்.ஐ. பிரதமப் பேராயர் கிளாட்சன், பேராயர் ஜெயசிங், பாஸ்டர் பெனி, பேராயர் பிரகாஷ், காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவைக் கொறடா பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் அருட்திரு வின்சென்ட் சின்னதுரை, பேராயர் எஸ்றா சற்குணம் ஆகியோர் சந்தித்து, பிற்படுத்தப்பட்ட கிறித்துவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தனி இடஒதுக்கீடு குறித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர்.

கோரிக்கை மனுவில், ‘‘கிறித்துவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் தலா 3.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு தந்து, அறிவிப்பு செய்து, அதனை முறைப்படியாக சட்டமாக்கி சரித்திரம் படைத்தீர்கள். ஆனால், அச்சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் அனுமதியிலும், வேலை வாய்ப்பிலும், முன்பு பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பெற்ற வாய்ப்புகளைவிட மிகக் குறைவாகவே பெற முடிந்துள்ளது. எனவே, பிற்படுத்தப்பட்ட கிறித்துவ சிறுபான்மையினர்க்கான 3.5 விழுக்காடு இடஒதுக்கீட்டை திரும்பப் பெற்று, முன்பிருந்தபடி பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டிலேயே நாங்கள் தொடர்ந்து இருக்க வாய்ப்பளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறித்துவ சமுதாயத்தினரின் இந்தக் கோரிக்கையை மிகுந்த பரிவோடும், கனிவோடும் ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,

‘‘பிற்படுத்தப்பட்ட கிறித்துவ மக்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்கும் கல்வி, வேலைவாய்ப்புகளில் தனி இடஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கை தி.மு.க. ஆட்சியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களுக்கு தலா 3.5 சதவிகிதமாக தனி இடஒதுக்கீடு அறிவிக்கப்பட்டது. நல்ல எண்ணத்துடன் கோரிக்கை வைக்கப்பட்டு; அதே நல்ல எண்ணத்துடன் அரசின் சார்பில் நிறைவேற்றப்பட்ட இந்தக் கோரிக்கையினை நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களைக் கொண்டு ஆய்வு செய்து, அறிக்கை பெற்று; தனி இடஒதுக்கீட்டுக்கான அவசரச் சட்டம் 2007ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் செயல்பாட்டிற்கு வந்தது. தங்கள் கோரிக்கை நிறைவேறியது என்ற மகிழ்ச்சியை கிறித்துவ சமுதாயத்தைப் பொறுத்தவரையில் முழுமையாக அடைந்திட முடியாமல், அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்புத் துறைகளில் உரிய இடம் கிடைக்காமல் பின்னடைவு ஏற்படக்கூடும் என்ற ஐயப்பாட்டினைத் தோற்றுவித்துள்ளது’’.

‘‘கல்வி, வேலைவாய்ப்புகளில் பின்னடைந்துள்ள இஸ்லாமிய மக்களுக்கு இந்த தனி இடஒதுக்கீடு மூலம் கிடைக்கிற ஆதாயத்தை அவர்கள் வரவேற்கிற நிலையில், கிறித்துவ சமுதாயத்தினர்க்கு இந்த தனி இடஒதுக்கீடு முன்பிருந்த வாய்ப்புகளை குறைத்திருப்பதை எண்ணிப் பார்த்து – பிற்படுத்தப்பட்ட கிறித்துவர்களுக்கு பழையபடியே இடஒதுக்கீடு தொடர்ந்திட; அவர்களுக்கு தனி இடஒதுக்கீடுக்கான ஏற்பாட்டினைத் திரும்பப் பெறுவதென்றும்; சட்டத்தில் தக்க திருத்தம் மேற்கொள்வதென்றும்; பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர் கல்வி, வேலை வாய்ப்புகளில் இன்னும் முன்னேற்றம் காணவேண்டிய சூழ்நிலையைக் கருதி அவர்களுக்கு மட்டும் இந்த தனி இடஒதுக்கீடு ஆணையை நடைமுறைப் படுத்துவதென்றும் அரசு முடிவெடுத்துள்ளது’’ என்று அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ஆர்க்காடு வீராசாமி, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர்.பொன்முடி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.சுரேஷ்ராஜன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன், மாநில திட்டக்குழு துணைத்தலைவர் டாக்டர் நாகநாதன் ஆகியோரும்; உள்துறை முதன்மைச் செயலாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர், சட்டத்துறைச் செயலாளர் ஆகியோரும் உடனிருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.